[1967 ஜூலை 6

மருத்துவ மனைகள்.

* 187 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் ஆஸ்பத்திரியில் 40 படுக்கை வசதிகளுடன் புதிய கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டு 1962-வது ஆண்டில் மேற்படி திட்டம் கைவிடப்பட்டதா?

(இ) ஆம் எனில், மீண்டும் அதைக் கட்டி முடிக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) குடியாத்தத்திலுள்ள அரசு மருத்துவ மனையில் 40 படுக்கைகளைக் கொண்ட வார்டு ஒன்றைக் கூடுதலாகக் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசினுல் ஆய்வு செய்யப்பட்டு தள்ளி வைக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஏற்கனவே அங்கு ஒரு மிஷன் ஆஸ்பத்திரி இருந்தது. இந்த ஜில்லாவில் வேலூருக்கு அடுத்தாற்போல மிகப் பெரிய நகரம் குடியாத்தம். இந்த நிலைமையில் அங்கே உள்ள மிஷன் ஆஸ்பத்திரியையும் மூடிவிட்ட காரணத்தினுல், 40 படுக்கைகள் அதிகப்படுத்துவதற்காக வேண்டி, இரும்பு சாமான்கள் முதற்கொண்டு சிமெண்டு வரைக்கும் எல்லாமே கொண்டுவந்து, அதற்குப் பிறகு அது கைவிடப்பட்டுவிட்டது. எனவே, இந்த அரசாவது தயவுசெய்து உடனடியாக அதைக் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவசர கால நெருக்கடியை அனுசரித்து மேற்படி திட்டம் தள்ளி வைக்கப்பட்டது. தற்பொழுதுள்ள நிதி நிலைமையின் காரணமாக உடனடியாக அது எடுத்துக் கொள்ளப்படாவிட்டாலும், அதைப்பற்றி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வட ஆற்காடு மாவட்டமே இப்படிப்பட்ட கவனிப்பாரற்ற மாவட்டம். பஸ் கேட்டால் இல்லை, ஏலகிரியில் டூரிஸ்டு ஹோம் கேட்டால் இல்லை. ஆனுல், சுகாதார அமைச்சராவது இதற்காக முழு ஒத்துழைப்பு கொடுத்து, இந்த மாவட்டத்தில் இந்த ஆஸ்பத்திரியில் படுக்கை வசதியை அதிகமாக ஆக்குவதற்கு வேண்டிய கட்டடத்தை கட்டித் தர முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்த மாவட்டமாக இருந்தாலும் சமமாகக் கருதப்படும். மாவட்டத்திற்கு மாவட்டம் பாகுபாடு காட்டப்படமாட்டாது. கனம் உறுப்பினர் கருத்து பரிசிலனை செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

1967 ஜூலை 6]

திரு. நா. காசிராமன்: இந்தத் திட்டத்திற்காக ஆகக் கூடிய மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதைப்பற்றி விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடியாத்தத்திலுள்ள மருத்துவ மனையைப்பற்றி அடுத்த துணைக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கேட்பார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: குடியாத்தம் மருத்துவ மனையில் எத்தனை படுக்கைகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றிய விவரம் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: பெர்மனென்டு பில்டிங் உடனடியாகக் கட்டவில்லை என்று சொன்னாலும், டெம்பரரி ஷெட்டாவது கட்டி, அதிகமான படுக்கைகளை ஏற்படுத்த அரசாங் கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றியும் விவரம் இப்பொழுது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கிடைக்கும்.

திரு. கே. விநயகம்: குடியாத்தம் ஒரு தாலுகா தலைநகரமாக இருப்பினும் கூட, அங்கே ஒரு அரசாங்க ஆஸ்பத்திரி இல்லை என்பது உண்மைதானா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The main question relates to additional accommodation. There is already a hospital.

* 188 **வினா.—திரு. வெ. முனுசாமி:** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சியிலுள்ள அரசினர் வைத்திய சாலையில் அறுவை சிகிச்சைக் கூடம் (Operation Theatre) அமைக்க எடுத்த ஏற்பாடு என்னவாயிற்று?

(இ) காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) அரசின் நிதிநிலை மிகக் கடினமாக இருப்பதால் செஞ்சி அரசினர் மருத்துவ மனையில் மகப்பேறு-அறுவை சிகிச்சைக் கூடம் கட்டும் செயற்குறிப்பு தள்ளிப் போடப்பட்டுள்ளது.